*அத்தியாயம் 3*

ப்ரஹ்ரிஷ்டமுதிதோ லோக:

# மாமன்னர்களின் மகாயக்ஞங்கள்: இராமாயணம்

*தன் இல்லத்தின் வாயிலிலிருந்து யாரையும் பசி, தாகத்துடன் அனுப்பக்கூடாதென்ற மீறமுடியாத நியமத்தை,*

न कंचन वसतौ प्रत्याचक्षीत ।

*விதிப்பதற்கு முன் தைத்திரீயோபநிஷத்து இன்னொரு விரதத்தையும் உபதேசிக்கிறது [1]:*

अन्नं बहु कुर्वीत । तद्व्रतम् ।

*அன்னத்தைப் பெருக்குவதற்கு முயிற்சி செய். இது விரதம். மனித வாழ்க்கையின் மீறக்கூடாத நியதி.*

*பாரத நாட்டின் பரம்பரையில் வந்த புகழ் வாய்ந்த மாமன்னர்கள் வேத வாக்கியத்தின் இத்தகைய வெளிப்படையான விதிமுறைக்குக் கட்டுப்பட்டு உணவைப் பெருக்குவதிலும் அனைவருக்கும் பெருமளவில் உணவைப் பகிர்ந்தளிப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டு அதற்கான திட்டப்பணிகளை உருவாக்கி நிறைவேற்றும் பெருமுயற்சிகளில் சிந்தையாலும் செயலாலும் ஓயாது ஈடுபட்டதில் ஆச்சரியம் இல்லை. இடையறா அன்னதானம் புகழ் பெற்ற மாமன்னர்களின் ராஜ்யங்களில் எங்கெங்கும் எப்பொழுதும் நடைபெற்ற வண்ணம் இருந்தது. அங்கு பசி, தாகத்துடனோ ஆதரவின்றியோ யாரும் வருந்த*

---

[1] *தைத்திரீயோபநிஷத்து 3.9, ப. 229*

வில்லை. இவ்வாறான போதிலும் இதிகாச புராணங்களில் வெகுவாகப் புகழப்படும் மாமன்னர்களின் மாபெரும் யக்ஞங்கள் மிகுந்த அளவில் நீண்ட காலத்திற்கு ஓயாது நடைபெறும் மகத்தான அன்னதான உற்சவங்களாகவே பரிமளிக்கின்றன.

மாமன்னர்களின் யக்ஞங்களில் அளவிறந்த அன்னதானமன்றி நடைபெறுவது மற்றும் பல என்பது திண்ணம். இம்மகாயக்ஞங்கள் ராஜ்யத்தின் தலைநகரில் அவ்வப்போது குவியும் பலவித செல்வங்கள் அனைத்தையும் மீண்டும் மக்களுக்கே சமர்ப்பிக்கும் உற்சவங்களாகவும் விளங்குகின்றன. செல்வத்தை இவ்வாறு அவ்வப்போது வாரி வழங்கி பகிர்ந்தளிப்பது பாரத நாட்டின் அரசியல் நிர்வாக சித்தாந்தமாகும்.

இந்த மாமன்னர்களின் யக்ஞங்கள் பரதகண்டமெங்கும் திகழ்ந்த சிற்பிகள், ஸ்தபதிகள் மற்றும் திறமை வாய்ந்த கைவினைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் உற்சவங்களாகவும் விளங்கின. நாட்டின் மிகச் சிறந்த இசைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், ஓவியர்கள், பண்டிதர்கள், கவிஞர்கள், இலக்கண வல்லுனர்கள் ஆகியோர் சங்கமிக்கும் சபைகளாகவும் இந்த யக்ஞங்கள் திகழ்ந்தன.

மேலும், இப்பெரும் யக்ஞங்கள் பரதகண்டத்தின் நிலப்பரப்பு மற்றும் பண்பாட்டு ரீதியான ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் மாபெரும் உற்சவங்களாகவும் விளங்கின. அனைத்து அரச குலங்களின் அரசர்களும், அரச குமாரர்களும் அனைத்து நாடுகளின் தலையாயப் பெருமக்களும், எல்லா ஜாதி, சமுதாயங்களின் பிரமுகர்களும், வேள்விகளில் ஒன்று கூடினர். ராஜ சக்தியானது, அனைத்து ராஜகுலங்கள், நாடுகள் மற்றும் சமுதாயங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டால் மட்டுமே அச்சக்தியைத் தருமத்தின் வரையறைக்குள் நிலை நாட்ட முடியும் என்பது அரசியல் அமைப்பு பற்றிய பாரத நாட்டின் அடிப்படைச் சிந்தனையாகும். ராஜ்யத்தின் வலிமை இவ்வாறு பல்வேறு மையங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்ட போதிலும் ராஜ்யத்தின் வலிமைக்கு உறைவிடமாய் விளங்குவோர் அனைவரும் இப்பெரும் யக்ஞங்களில் ஒன்று சேர்ந்தமை பரதகண்டம் முழுவதிலும் நிலவிய அடிப்படை ஒற்றுமையை உறுதிப்படுத்தியது.

பாரத நாட்டின் மகாயக்ஞங்கள் பரதகண்டத்தின் ஆழமான நோக்குகளைப் பிரதிபலிக்கும் மகோற்சவங்களாய்க் காட்சி அளிக்

கின்றன. இந்த யக்ஞங்களின் முக்கிய அங்கமாய் விளங்குவது அன்ன தானமே என்பது இந்த யக்ஞங்களைப் பற்றி நமது பண்டைய இலக் கியங்களில் காணப்படும் வருணனைகளிலிருந்து நன்கு வெளிப் படுகிறது.

இம்மகாயக்ஞங்களில் பல மகத்தான சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றுள் சில, காலத்தின் மாற்றங்களையும் சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும் மகத்தான இந்தச் சம்பவங்கள் அனைத்தும் இடையறாத பெருமளவிலான அன்னதானத்தின் பின்னணியிலேயே நடைபெறு கின்றன. மாபெரும் யக்ஞம் என்றால் மாபெரும் அன்னதானமே. தனித்து நடைபெறும் அன்னதானம் ஒன்றே யக்ஞமெனும் தகுதி பெறும். ஆனால், அன்னதானமின்றி எந்த மகாயக்ஞமும் நிகழவிய லாது என்றே கூறவேண்டும்.

## ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞம்

பாரதீய இலக்கியத்தில் மிகச் சிறந்ததென வருணிக்கப்படும் யக்ஞங் களுள் ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞம் முக்கியமானது. ஸ்ரீராமர் தம் ராஜ்யத்தின் உச்சக் கட்டத்தில் இந்த யக்ஞத்தை மேற்கொள்கிறார். இந்த யக்ஞம் முடிவுறுகையில் பூமிதேவியின் புதல்வியான சீதை மீண் டும் தன் தாயின் மடியில் ஐக்கியமாகிறாள். இதுவே ஸ்ரீராமரின் பூலோக வாசத்தின் மகத்துவபூர்ணமான இறுதிச் சம்பவம் எனலாம். ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தில் இந்த வேள்விக்குப் பிறகு ஒரு முக்கி யமான சம்பவம் மட்டுமே கூறப்படுகிறது. ஸ்ரீராமர் தம் சகோதரர்கள் மற்றும் அயோத்தி நகரவாசிகளுடன் புண்ணிய தீர்த்தமான ஸரயு நதி யுள் பிரவேசித்து தம் பரமபதத்திற்குச் செல்வதே அந்தச் சம்பவம்.

அகஸ்திய முனிவரிடம் ராஜா சுவேதரின் கதையைக் கேட்ட பின்னர், அயோத்திக்குத் திரும்பிய உடனேயே, ஸ்ரீராமர், சிறிதும் கால தாமதமின்றி யக்ஞத்தை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைத் தொடங்குகிறார். ஸ்ரீராமர் அயோத்தியை அடையும் முன்னரே இந்த மாபெரும் யக்ஞத்தை நடத்தத் தம் மனதில் தீர்மானம் செய்து விட்டார் போலும். அகஸ்திய முனிவரின் ஆசிரமத்திலிருந்து புறப்பட்ட புஷ் பக விமானம் அயோத்தி நகரின் அரண்மனையின் மையத்தில் வந்தி றங்கியதும், தன் தம்பிகளான பரதனையும் லக்ஷ்மணனையும் அழைத்து வருமாறு வாயிற்காவலரைப் பணிக்கிறார். பரதனும்

லக்ஷ்மணனும் வந்தவுடன் எந்த பீடிகையும் இன்றி அவர், தாம் மகா யக்ஞம் நடத்தத் தீர்மானித்துள்ளதைக் கூறுகிறார்.

ஸ்ரீராமர் தற்சமயம் மேற்கொள்ள வேண்டியது ராஜசூய யக்ஞமா அல்லது அசுவமேத யக்ஞமா என்பது பற்றிச் சகோதரர்களுக்கிடையே ஒரு சர்ச்சை எழுகிறது. முதலில், ஸ்ரீராமர், ராஜசூய யக்ஞம் நடத்தும் தம் விருப்பத்தை வெளியிடுகிறார். ஆனால், ராஜசூய யக்ஞத்தால் ராஜ வம்சங்கள் அனைத்தும் விநாசமாகலாம்; மேலும், பூமி முழுவதிலும் பராக்கிரமம் நலிந்து விடலாம் என்பதைப் பரதன் பணிவுடன் அவருக்கு நினைப்பூட்டுகிறான். 'ஸ்ரீராமரோ ராஜ குலங்களைப் போஷிப்பவர்; சகல ஜீவன்களையும் தந்தையின் பரிவோடு பரிபாலிப்பவர், அத்தகைய ஒருவர் அரசர் குலங்களை அழித்து, வீரர்களின் மறைவுக்குக் காரணமாகி உயிர்ச் சேதம் விளைவிக்கும் ராஜசூய யக்ஞத்தை எவ்வாறு மேற்கொள்ள முடியும்?' என்று பரதன் கூறுகிறான்.

பாரத நாட்டின் ஆதர்சமான அரசியல் அமைப்புக்கு இலக்கண மாய்த் திகழும் இராமராஜ்யத்தின் அடிப்படை நோக்கங்களை நினைவுகூர்வதும் உறுதிப்படுத்துவதுமே இந்த விவாதத்தின் நோக்கம் போலும். இராமராஜ்யத்தில் அரசியல் அதிகாரம் பரவலாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீமத் வால்மீகிராமாயணத் தின் முதல் அத்தியாயத்திலேயே ஸ்ரீராமரின் ஆட்சிக் காலத்தில் அரச குலங்கள் நூறு மடங்கு விருத்தியடைவது ஸ்ரீராமரின் ஒரு சிறப்புத் தன்மையெனப் போற்றப்படுகிறது [2]:

राजवंशाञ्छतगुणान् स्थापयिष्यति राघवः ।

தன் சகோதரர்களின் ஆலோசனையை ஏற்று ஸ்ரீராமர் அசுவமேத யக்ஞம் நடத்துவதெனத் தீர்மானித்தார். யக்ஞத்தை நடத்துவதற்கு முன்னர் யக்ஞாசுவம், வேள்விக்கான குதிரை, லக்ஷ்மணனின் பாது காப்பில் பூமியெங்கும் சஞ்சரித்துப் பல மன்னர்களின் ராஜ்யங் களுக்குச் சென்று அம்மன்னர்களின் சிறப்பு மரியாதைகளைப் பெற்று வர அனுப்பப்படுகிறது. மஹா பராக்கிரமசாலியெனப் புகழ் வாய்ந்த ஸ்ரீராமரின் வேள்விப் பரிக்கு ஆதரம் அளிப்பதால், அந்த அரசர்களின் கௌரவம் உயர்ந்ததேயன்றி அவர்களின் ஆட்சிக்கோ அதிகாரத் திற்கோ குறையேதும் ஏற்படவில்லை.

[2] வா.இராமாயணம் பால 1.96, ப. 30

அசுவமேத யக்ஞம் நடத்தத் தீர்மானித்தவுடன், ஸ்ரீராமர் வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காஷ்யப்பர் முதலான துவிஜோத்தமர்களை அழைக்குமாறு லக்ஷ்மணனிடம் கூறுகிறார். அனைவரும் கூடிய பிறகு ஸ்ரீராமர் அப்பெரியவர்களிடம் பணிவுடன், தான் அசுவமேத யக்ஞம் நடத்த நிர்ணயித்திருப்பதைத் தெரிவித்து, அவர்தம் நல்லாசிகளைப் பெற்று, பின்னர் யாகத்திற்கான ஏற்பாடுகளைத் தொடங்குகிறார்.

**ஆயத்தங்கள்**

யக்ஞத்திற்கான ஆயத்தங்களின் முதல் கட்டமாக ஸ்ரீராமர் லக்ஷ்மணனிடம் உடனடியாகத் தன் பிரியமான நண்பர்களான வானர ராஜன் சுக்ரீவனையும், அரக்கர் கோன் விபீஷணனையும் வரவழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறுகிறார். மானிடரல்லாத வேறு இனங்களைச் சேர்ந்த சாம்ராஜ்யங்களின் இந்த மாமன்னர்கள் ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்திற்கு வருகை தரும் அதிதிகளைக் கவனித்து உபசரிக்கும் பொறுப்பை ஏற்கின்றனர்.

ஸ்ரீராமர் அனைத்து மன்னர்கள், அனைத்து பிராமணர்கள், ரிஷிகள், தபஸ்விகள், வித்வான்கள், கலை வல்லுநர்கள் முதலானோரை அழைக்குமாறு லக்ஷ்மணனுக்கு உத்தரவு இடுகிறார். அனைவரையும் பரிஜனங்களுடனும், சீடர்களுடனும் குடும்பத்தினருடனும் யாகத்திற்கு அழைப்பிக்குமாறு கூறுகிறார்.

பிறகு ஸ்ரீராமர் கோமதி நதிக்கரையில் உள்ள நைமிசாரண்ய வனத்தில் விசாலமான ஒரு யக்ஞ மண்டபம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு கூறுகிறார். யாகம் எந்த விக்னமும் இல்லாமல் நடப்பதன் பொருட்டு உடனடியாக நூற்றுக்கணக்கான தரும வித்தகர்களைக் கூட்டி சாந்தி கருமம் தொடங்குமாறு பணிக்கிறார்.

இந்த ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்த பின்னர் ஸ்ரீராமர் எல்லா மக்களுக்கும் விரைவில் அழைப்புகளை அனுப்புமாறு லக்ஷ்மணனிடம் கூறுகிறார். எந்தப் பாகுபாடும் இல்லாமல், அனைவருக்கும் அழைப்பு விடுக்கும்படி கூறுகிறார். யக்ஞத்திற்கு வருகை தரும் அனைவரும் சிறந்த மரியாதை பெற்று, முழுநிறைவுடன் மிகுந்த மகிழ்ச்சி அடைய, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆணை

யிடுகிறார். ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தின் வரிகளில் ஸ்ரீராமரின் ஆக்ஞையாவது [3]:

तुष्टः पुष्टश्च सर्वोऽसौ मानितश्च यथाविधि ।
प्रतियास्यति धर्मज्ञ शीघ्रमामन्त्र्यतां जनः ।।

வருகை தரும் அனைவரையும் இவ்வகையில் புஷ்டசந்துஷ்ட மானிடர்களாக்கும் பொருட்டு, திண்மையும் நிறைவும் உடையவர்களாக்கும் பொருட்டு, மிகப் பெரிய அளவில் உணவு வழங்குவதற்கான ஆயத்தங்கள் அவசியம். எனவே ஸ்ரீராமர் யக்ஞத்திற்கென சேர்க்க வேண்டிய பொருட்குவியலைப் பற்றிக் குறிப்பிட்டு ஆணையிடுகிறார் [4]:

शतं वाहसहस्राणां तण्डुलानां वपुष्मताम् ।
अयुतं तिलमुद्गस्य प्रयात्वग्रे महाबल ।
चणकानां कुलित्थानां माषाणां लवणस्य च ।
अतोऽनुरूपं स्नेहं च गन्धं संक्षिप्तमेव च ।।

*மஹாபலசாலியான லக்ஷ்மணா, லட்சக்கணக்கான வாகனங்களில் நல்ல தரமான அரிசி தானியங்களையும், பல்லாயிரக்கணக்கான வாகனங்களில் எள், பச்சைப் பயறு, உளுந்து, உப்பு ஆகியவற்றையும், இவை அனைத்திற்கும் தகுந்த அளவு நெய், எண்ணெய், மற்றும் சுகந்தப் பொருட்களையும் ஏற்றி முன்னதாகவே யக்ஞ பூமிக்கு அனுப்புவாயாக.*

மேலும் ஸ்ரீராமர், இந்த உணவுப் பொருட்களுடன், கோடிக்கணக்கான தங்க நாணயங்களையும், இவையன்றி மற்ற விதமான தங்கத்தையும் பெருமளவில் யக்ஞபூமிக்கு முன் கூட்டியே அனுப்புமாறு கூறுகிறார். இவற்றைப் பின்தொடர்ந்து சமையல் வல்லுநர்களும், கைவினைஞர்களும், ஆடல் பாடற்கலைஞர்களும், சில்பிகளும், வணிகர்களும், வித்வான்களும், வைதிகர்களும், புரோகிதர்களும் பெருந்திரளாய்ச் செல்லட்டும்; தவிரவும், அயோத்தி நகரப் பெரியோர்களும், பெண்களும், குழந்தைகளும் செல்லட்டும் என்று ஆக்ஞையிடுகிறார். மேலும் இப்பெருந்திரளான உணவுப் பொருட்களையும், மற்ற

[3] வா. இராமாயணம் உத்தர 91.18, ப. 1649
[4] வா. இராமாயணம் உத்தர 91.19-20, ப. 1649

செல்வங்களையும், மக்கள் கூட்டத்தையும், பாதுகாப்புடன் யக்ஞ பூமிக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை ஸ்ரீராமர் பரதனுக்கு அளிக்கிறார்.

**அன்னதானம்**

யக்ஞம் முறையாகத் துவங்கும் முன்பே நைமிசாரண்யத்தில் உண வளிக்கும் படலம் துவங்கிவிடுகிறது. சுக்ரீவனும், அவனுடைய வானர சேனையும் அனைவருக்கும் உணவு பரிமாறும் பணியில் ஈடு படுகின்றனர்; விபீஷணனும் அவனுடைய ராக்ஷஸ பரிவாரங்களும், அயோத்தி நகர் பெண்களும் யக்ஞத்திற்கு வருபவர்களை முறைப்படி வரவேற்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

இவ்வேற்பாடுகள் அனைத்தும் நடைபெற்று அன்னதானம் துவங்கிய பிறகே, ஸ்ரீராமர் யக்ஞத்தைத் தொடங்குகிறார். சுப லக்ஷணங்கள் பொருந்திய, கருமானை ஒத்த குதிரையை லக்ஷ்மண னின் பாதுகாப்பில் பூமிப் பிரதக்ஷிணத்திற்கு அனுப்பிய பின்னர் தான் யக்ஞத்தைத் தொடங்க நைமிசாரண்யத்திற்குப் புறப்படுகிறார்.

ஸ்ரீராமரின் இந்த யக்ஞம் ஓராண்டு காலத்திற்கும் மேலாகவே நீடிக்கிறது. இக்காலம் முழுவதும் ஸ்ரீராமர் நைமிசாரண்யத்திலேயே தங்கியிருந்து, அங்கு நடப்பனவற்றை மேற்பார்வையிடுகிறார். இதற் கிடையே, பூமியின் அரசர்கள் அனைவரும் அன்பளிப்புகளுடன் யக் ஞத்தில் பங்கேற்க வந்து சேருகின்றனர். ஸ்ரீராமர், தானே முன்னின்று அவர்களை உபசரித்து அவர்களது பரிசில்களை ஏற்று, அதற்குப் பிரதி யாக அவர்களுக்கு அன்னபானங்கள், வஸ்திரம் முதலான சன்மானங் களை அளித்து விருந்தோம்புகிறார். ஸ்ரீராமரின் உத்தரவுப்படி பரத னும், சத்ருக்னனும் வந்து செல்லும் அரசர்களைத் தகுந்த முறையில் உபசரித்து கௌரவிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபடுகின்றனர்.

பூவுலகத்து அரசர் பெருமக்கள் அனைவரும் கூடிய இந்த யக்ஞத் தில் மாபெரும் விருந்து ஓயாது தொடர்ந்து நடைபெறுகிறது. சுக்ரீவ னும், விபீஷணனும் தம் சேனைகளுடன் மிக நேர்த்தியுடனும், கவனத் துடனும், உற்சாகத்துடனும், இடையறாது அன்னமளிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். மகாகவி வால்மீகி, ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத் தையும் மகிமை பொருந்திய அன்னதானத்தையும் இவ்வாறு வருணிக் கிறார்[5] :

---

[5] வா. இராமாயணம் உத்தர 92.10-13, ப. 1650

ईदृशं राजसिंहस्य यज्ञप्रवरमुत्तमम् ।
नान्यः शब्दोऽभवत् तत्र हयमेधे महात्मनः ।
छन्दतो देहि देहीति यावत् तुष्यन्ति याचकाः ।
तावत् सर्वाणि दत्तानि क्रतुमुख्ये महात्मनः ।
विविधानि च गौडानि खाण्डवानि तथैव च ।
न निःसृतं भवत्योष्ठाद् वचनं यावदर्थिनाम् ।
तावद् वानररक्षोभिर्दत्तमेवाभ्यदृश्यत ॥

*இவ்வாறு வேந்தர்களுள் அரிமாவை ஒத்த மகாபராக்கிரம சாலியான ஸ்ரீராமரின் இந்த சிரேஷ்டமான யக்ஞம் உத்தமமான விதிகளை அனுசரித்துத் தொடர்ந்து நடைபெற்றது. மகாத்து மாவான ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்தில் ஒலித்த வண்ணம் இருந்த முழக்கமாவது: 'அளியுங்கள், அளியுங்கள், யாசிப்போர் முழுமையான திருப்தியை அடையும் வரை ஓயாது அளித்துக் கொண்டே இருங்கள்.' ஸ்ரீராமர் மேற்கொண்ட மிகச் சிறந்த இந்த யக்ஞத்தில் பலவிதமான உணவுப் பண்டங்களும், வெல்லமும், கற்கண்டும் கலந்த இனிப்பு வகைகளும் பரிமாறப்பட்டன. வானர சேனையும் ராக்ஷஸ சேனையும் விருந்தினர் வாயால் கேட்பதற்கு முன்பே குறிப்பறிந்து வேண்டியதைப் பரிமாறிச் சிறப்பாக உபசரித்தார்கள்.*

நைமிசாரண்யத்தில் நடைபெற்ற இம்மாபெரும் அன்னதானம் எத்துணை முழுமை பெற்றிருந்ததெனில், அங்கு திரண்டிருந்த பெருங்கூட்டத்தில் ஒருவர் கூட மெலிந்தோ, வாட்டமுற்றோ, வருத்த முடனோ காணப்படவில்லை. அங்கு வந்திருந்த மக்கள் அனைவரும் ஹ்ருஷ்ட, புஷ்ட, சந்துஷ்டர்களாய், நல்லூட்டம் பெற்றவராய், திண்மையுடனும், நிறைவுடனும் காணப்பட்டனர்[6]:

न कश्चिन्मलिनो वापि दीनो वाप्यथवा कृशः ।
तस्मिन् यज्ञवरे राज्ञो हृष्टपुष्टजनावृते ॥

*ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞம் இவ்வாறு மிக மாட்சிமை பொருந்தியதாக இருந்தது. இந்த யக்ஞத்தில் நடைபெற்ற மிகச்*

*[6] வா. இராமாயணம் உத்தர 92.13-14, ப. 1650*

சிறப்பான அன்னதானம் ஒப்பற்ற தனித்தன்மையுடன் விளங்கியதை மகாகவி வால்மீகி பல சுலோகங்களில் வருணிக்கிறார். இறுதியில் அவர், இந்த யக்ஞம் ஓராண்டு காலத்திற்கும் அதிகமாக நீடித்த போதிலும் அக்காலம் முழுமையிலும் அங்கு ஒருவருக்கும் எந்தக் குறைபாடும் இருக்கவில்லை, எங்கெங்கும் எப்பொழுதும் மிகுதியான நிறைவே பெருகியிருந்தது என்கிறார்[7]:

ईदृशो राजसिंहस्य यज्ञः सर्वगुणान्वितः ।
संवत्सरमथो साग्रं वर्तते न च हीयते ।।

**சீதை தாய்மடி சேர்தல்**

இடையறாது தொடர்ந்த மகத்துவமான அன்னதானத்தின் பின்னணியில் நடைபெற்ற இந்த மகா அசுவமேத யக்ஞத்தில் பல அற்புத சம்பவங்கள் நிகழ்கின்றன. ஸ்ரீராமரின் அவதார லீலையை ஞான திருஷ்டியில் கண்டு அதை ஆதிகாவியமாகப் படைத்தளித்த மகாகவியான வால்மீகி, தானே அந்த யக்ஞபூமிக்கு எழுந்தருளுகிறார். அவருடன் அவர்தம் ஆசிரமத்தில் பிறந்த ஸ்ரீராமரின் இரட்டைப் புதல்வர்களான லவகுசர்களும் வருகை தருகின்றனர். சீதையின் இலங்கை வாசத்தினால் எழுந்த அபவாதத்திற்கு அஞ்சிய ஸ்ரீராமர் அவ்வுத்தமியை நாடு கடத்த, அவள் வால்மீகியின் ஆசிரமத்தில் தஞ்சமடைந்திருந்தாள். அங்குப் பிறந்த ஸ்ரீராமரின் குமாரர்கள் லவகுசர்களுக்கு வால்மீகி தாமே குருவாக இருந்து தம்முடைய ஆதிகாவியமாம் இராமாயணத்தை இசையுடன் ஓதுவித்தார். வால்மீகியின் ஆக்ஞைப்படி லவகுசர்கள் இராமாயணத்தைக் கானமாக இசைத்தபடி அங்கு உள்ள வீதிகளில் செல்கின்றனர்.

லவகுசர்களின் சுத்தமான அதிமதுரமான கானம் ஸ்ரீராமரின் செவிகளில் ரீங்காரமிட்டது. தம் உலக வாழ்க்கையின் கதையை இத்துணை அழகுடன் கவிநயம் மிளிர, இன்னிசையுடன் பாடக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்த ஸ்ரீராமர், புராண, வியாகரண, சங்கீத, வேதாந்த வல்லுநர்களும், மற்ற வித்வான்களும், பேரரசர்களும், முனிவர்களும், இன்னும் மற்ற அறிஞர் கூட்டமும் நிறைந்த சபையில் அந்த பாலகர்களைத் தம் பாடலை இசைக்க அழைக்கிறார். லவகுசர்கள்

[7] வா. இராமாயணம் உத்தர 92.19, ப. 1650

ஆதிகாவியமான இராமாயணத்தை இசையுடன் பாடத்தொடங்கிய வுடனேயே சபை ஆனந்த வெள்ளத்தில் மூழ்குகிறது; அவர்கள் காவியத்தை மேன் மேலும் பாடப் பாட, சபையினருக்கு அந்தத் திவ்வியக் குமாரர்கள் வேறு யாருமல்ல, தங்கள் அபிமானத்திற்குரிய ஸ்ரீராமரின் இரட்டைப் புதல்வர்களே என்பது ஊர்ஜிதமாகிறது.

அப்போது ஸ்ரீராமர், வித்வான்களும், முனிவர்களும், மன்னர்களும் இன்னும் மற்ற மகாஜனங்களும் கூடிய அச்சபைக்குச் சீதை தானே வந்து பலரும் அறிய தான் பதிவிரதா தருமத்தினின்றும் பிறழவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்று விரும்புகிறார். முன்னொரு தரமும் இவ்வாறே, ஸ்ரீராமர் இராவணனுடன் போரில் வெற்றி பெற்று சீதையை இலங்கையின் அசோகவனத்துச் சிறையிலிருந்து மீட்ட பின்னர் தன் பதிவிரதா தருமத்திற்குக் கேடு விளையவில்லை என்பதை உலகுக்கு நிரூபிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். அச்சமயத்தில் சீதை ஸ்ரீராமரின் விருப்பப்படியே அக்னி தேவனின் சாட்சியுடன் தன் கற்பு நெறிக்கு குறையேதும் ஏற்படவில்லை என்பதை வானரர்களும், ராக்ஷஸர்களும் நிறைந்த அவையில் மிக தைரியத்துடன் நிரூபித்தாள். இம்முறை மீண்டும் அதே போல் பரீட்சைக்கு உள்ளாக்கப்பட்ட சீதை தன்னுடைய தாயான பூமி தேவியிடம் தான் பவித்ரமானவள் என்பது சத்தியமெனில், தன் மனதிலும், பேச்சிலும், செயலிலும் ஸ்ரீராமரையே ஸ்மரணம் செய்வது உண்மையெனில் பூமிதேவி தன்னை மீண்டும் மடியில் ஏற்றுக் கொள்ளட்டும் எனப் பிரார்த்திக்கிறாள். இப்பிரார்த்தனையைக் கேட்டவுடன் பூமி பிளக்க, அங்கு தோன்றிய பூமிதேவி சீதையைத் தன்னிடம் அடைக்கலம் கொண்டு, மகாபராக்கிரமசாலியான நாகங்கள் சுமக்க, ஒரு பெருமை மிகுந்த சிம்மாசனத்தில் அமர்த்தி, பூமிக்குள் செல்ல, பூமியின் பிளவு மூடிக் கொள்கிறது. கூடியிருந்த சபை ஸ்தம்பித்து நிற்க, சீதை தன் தாய் மடி சேர்கிறாள்.

இவ்வாறு மகாபராக்கிரமசாலியான ராஜா ஸ்ரீராமர், சமூகத்தின் நியமத்திற்குத் தலை வணங்கி தன் பிரஜைகளை மகிழ்விக்கும் முயற்சியில் தம் பிரியமான பத்தினி ஜானகியையும் இழக்கத் துணிந்தார். எனினும் 'மரியாதா புருஷோத்தமன்' என்ற புகழ் பெற்ற ஸ்ரீராமர் மேற்கொண்டுள்ள விரதமே பிரஜைகளின் ரஞ்ஜனைக்காகத் தம் சுகத்தை மட்டுமின்றி, தம்முடைய சர்வத்தையும், ஏன் சீதையையுமே கூடத் தியாகம் செய்யத் துணிவதாகும்.

ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞம் சீதையின் மெய்சிலிர்க்க வைக்கும் பூமிப் பிரவேசத்துடன் முடிவடைகிறது. இச்சம்பவம் சாக்ஷாத் ஸ்ரீராம ரையே சிறிது நேரம் மனங்கலங்கி பேச்சிழக்கச் செய்கிறது. ஆயினும் சீதையை இழந்த பின்னரும் ஸ்ரீராமர் ஆயிரக்கணக்கான வருடங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்கிறார். ஏகபத்தினி விரதனான ஸ்ரீராமர் சீதையின் தங்கப் பதுமையைத் தன் இடப்பக்கத்தில் பிரதிஷ்டை செய்து ஆயிரக்கணக்கான யக்ஞங்களையும் நடத்துகிறார். உண்மை யில் ஸ்ரீராமருடைய நீண்ட கால ராஜாங்க நிர்வாகமே ஒரு மாபெரும் யக்ஞமாக விளங்குகிறது. இந்த யக்ஞத்தில் எங்கும் யாரும் பசி தாகத்தாலோ, ஆதரவற்றோ, வியாதிகளாலோ வருந்தாதவாறு சிருஷ்டியின் இயல்பான ஓட்டத்திற்கு எந்தத் தடையும் நேராமல் பாதுகாப்பதிலேயே ஸ்ரீராமர் இடையறாத முயற்சியுடன் ஈடுபடு கிறார்.

மகாகவி வால்மீகி ஸ்ரீராமரின் ராஜ்யத்தில் நிலவிய இயல்பான ஒத்திசைவைக் கீழ்க்கண்டவாறு வருணிக்கிறார்[8]:

काले वर्षति पर्जन्यः सुभिक्षं विमला दिशः ।
हृष्टपुष्टजनाकीर्णं पुरं जनपदास्तथा ।
नाकाले म्रियते कश्चिन्न व्याधिः प्राणिनां तथा ।
नानर्थो विद्यते कश्चिद् रामे राज्यं प्रशासति ।।

ஸ்ரீராமர் ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாய் ஆண்டபொழுது வானம் பொய்யாது வழங்கிற்று; எங்கும் வளம் கொழித்தது; எங்கெங் கும் எக்காலத்திலும் புத்துணர்ச்சியும் பொலிவும் பொங்க சுபிக்ஷம் நிலவியது. நாடு நகரங்கள் முழுவதிலும் ஆரோக்கிய மான, உற்சாகமான, ஊட்டம் பெற்ற பிரஜைகள் நிரம்பி இருந்த னர். அங்கு யாரும் அகால மரணம் அடையவில்லை. யாரும் நோய் நொடியால் அவதியுறவில்லை. சிருஷ்டியின் இயல்பான ஓட்டத்திற்கு எந்தக் கேடும் விளையவில்லை.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த இராமராஜ்யம் நீண்ட காலம் வரை நடைபெறுகிறது. ஆனால் ஸ்ரீராமரின் உலக வாழ்க்கையின் முக் கிய சம்பவங்கள் அவரின் அசுவமேத யக்ஞத்துடன், அவர்தம் பிரிய பத்தினி சீதையின் பூமிப் பிரவேசத்துடன் முற்றுப் பெறுவதாகவே

---

[8] வா. இராமாயணம் உத்தர 99.13-14, ப. 1661

தோன்றுகிறது. அதன் பின்னர் ஸ்ரீராமர், காலத்தின் தடையில்லா ஓட்டத்தை அனுசரிப்பதிலும் அதற்கு ஊறு விளையாது பாதுகாப்பதிலுமே தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார். பின், சமயம் வந்தவுடன் தம் உற்றார் உறவினருடனும், அயோத்தி நகரவாசிகளுடனும் ஸரயு நதியுள் பிரவேசித்துத் தம் நிரந்தர இடத்தை அடைகிறார்.

ஸ்ரீராமரின் பூலோக சஞ்சாரத்தின் முக்கியமான இறுதிச் சம்பவமான அசுவமேத யக்ஞம் ஒரு இடையறாத மாபெரும் அன்னதானத்தின் பின்னணியிலேயே நடைபெறுகின்றது என்பது கவனிக்கத் தக்கது. ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தின் இறுதி அத்தியாயத்தில் சீதை பூமிப் பிரவேசம் செய்த பிறகு, அவதார புருஷன் ஸ்ரீராமர் சீதையின் சுவர்ணப் பதுமையைச் செய்து தன் இடப்பக்கத்தில் இருத்திப் பல்லாண்டு காலம் தனியாகவே இராமராஜ்யத்தை நிர்வகித்தது மனதைத் தொடும் வண்ணம் வருணிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமராஜ்யத்தின் பிரஜைகள் ஹ்ருஷ்ட, புஷ்ட, சந்துஷ்டர்களாய், நல்லூட்டம் பெற்று திண்மையுடனும் நிறைவுடனும் தகுந்த முறையில் கௌரவிக்கப்பட்டவர்களாகவும் வாழ்ந்ததை இந்த அத்தியாயம் மிகச் சிறப்பாக விவரிக்கிறது. இவ்வகையில், ஸ்ரீராமர் தம்முடைய சுக துக்கங்களைப் பாராட்டாமல் சதா சர்வகாலமும் ஓயாத அன்னதானம் நடைபெறுவதையும், பிரஜைகள் ஹ்ருஷ்ட, புஷ்ட, சந்துஷ்டர்களாய் சிறப்புறுவதையும் தம் பரம லக்ஷியமாய்க் கொண்டிருந்தார் என்பதே வால்மீகி ராமாயணத்தின் இவ்வருணனையின் சாரமாகும்.

## ராஜா தசரதரின் அசுவமேத யக்ஞம்

ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தில் மற்றுமொரு சிறப்பான அசுவமேத யக்ஞம் வருணிக்கப்படுகிறது. ஆதிகாவியத்தின் தொடக்கத்திலேயே தசரத மன்னர் புத்திர பாக்கியம் பெற வேண்டி ஒரு அசுவமேத யக்ஞத்தை மேற்கொள்கிறார். தசரதரின் அசுவமேத யக்ஞமும் ஸ்ரீராமர் மேற்கொண்ட அசுவமேத யக்ஞமும் வெவ்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் வெவ்வேறு காரணங்களுக்காக நடைபெறுகின்றன. ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞம் ஒரு விதத்தில் அவருடைய பூலோக சஞ்சாரத்தின் இறுதிக் காலத்தில் நடைபெறும் துக்ககரமான சம்பவங்களை நமக்கு உணர்த்துகிறது. மாறாக, தசரதர் புத்திர பாக்கியம் வேண்டி மேற்

கொண்ட அசுவமேத யக்ஞம் ஆனந்த ஆரவாரத்துடன் ஸ்ரீராமர் அவதரிப்பதை உணர்த்துகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் நோக்கங்களிலும் காணப்படும் மாறுதல்களினால் யக்ஞத்திற்கான முயற்சி மற்றும் முன்னேற்பாடுகளின் வேகத்திலும் அளவிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் தென்படுகின்றன.

ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்திற்கான முன்னேற்பாடுகளும் நடவடிக்கைகளும் மிக விரைவாகச் செயலாற்றப்படுகின்றன. அகஸ்திய முனிவரின் ஆசிரமத்திலிருந்து அயோத்திக்குத் திரும்பிய ஸ்ரீராமர் புஷ்பக விமானத்திலிருந்து கீழ் இறங்கிய உடனேயே, துளியும் காலதாமதமின்றி யக்ஞத்திற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபடத் தொடங்குகிறார். தொடக்கத்தில் காணப்படும் இந்த வேகமும் அவசரமும் யக்ஞம் முடிவுறும் வரையில் நீடிக்கிறது. பின்னால் நிகழப்போகும் சம்பவங்களை நோக்கி விதியின் கைகளே இவ்வாறு அவரை அழைத்துச் சென்றது போல் தோன்றுகிறது.

இதற்கு மாறாக, தசரத மன்னரின் அசுவமேத யக்ஞம் எந்த அவசரமுமின்றி மிகுந்த நிதானத்துடன் செயலாற்றப்படுகிறது. புத்திர பாக்கியமான வரப்பிரசாதத்தை அடையும் விருப்பத்துடன் அசுவமேத யக்ஞம் நடத்த உத்தேசித்த தசரதர், முதலில் தம் எண்ணத்தை வணக்கத்திற்குரிய பெரியவர்களிடமும், குலகுருக்களிடமும் வெளிப்படுத்துகிறார். அனைவரிடத்தும் இந்த சுபகாரியத்திற்கான அனுமதியும் ஆசியும் பெற்றுக் கொண்டு பின்னர் தம் மந்திரிகளிடம் யக்ஞத்திற்கு வேண்டிய பொருட்கள் அனைத்தையும் சேகரிக்குமாறு பணிக்கிறார். ஸரயு நதியின் வடக்குக் கரையில் யக்ஞ பூமியை நிர்மாணிக்கவும் இன்னும் மற்ற அனைத்து ஏற்பாடுகளைத் தொடங்கவும் கட்டளையிடுகிறார். யக்ஞத்தின் ஏற்பாடுகள் அனைத்தும் மிகுந்த சிரத்தையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும், ஏனெனில், யக்ஞத்தில் சிறு குறை இருப்பினும் அதன் விளைவுகள் யக்ஞத்தின் கர்த்தாவைத் தீவிரமாகப் பாதிக்கும் என்று எச்சரிக்கிறார். அதன் பின்னர் ராஜா தசரதர் அந்தப்புரத்தை அடைந்து தம் மனைவிமார்களிடம் தாம் யக்ஞம் நடத்தத் தீர்மானித்துள்ளதை எடுத்துக் கூறி அவர்களையும் யக்ஞ தீட்சை பெற ஆயத்தமாய் இருக்குமாறு கூறுகிறார்.

இவ்வாறு அனைவருக்கும் யக்ஞத்தைப் பற்றி தெரிவித்த பின்னர், தசரத மன்னர் தம் ஆப்த மந்திரியான சுமந்திரரின் ஆலோசனைப்

படி வெகு தூரத்திலுள்ள அங்க தேசத்து யாத்திரைக்குப் புறப்படுகிறார். அங்க தேச மன்னரான உரோமபாதரின் மருமகன் ரிஷி ரிஷ்ய சிங்கரே தசரத மன்னரின் அசுவமேத யக்ஞத்திற்குப் பொருத்தமான ருத்விக் ஆவார் என்று சுமந்திரர் கூற, ரிஷ்யசிங்கரைச் சகல மரியாதைகளுடன் அயோத்திக்கு அழைத்து வர ராஜா தசரதர் தாமே தம் மனைவிமார்களுடனும், மந்திரிகள் மற்றும் சேனைகளுடனும் பல வனங்களையும் நதிகளையும் கடந்து சென்று அங்க தேசத்தை அடைகிறார். ராஜா உரோமபாதரின் அனுமதியுடன் ரிஷி ரிஷ்யசிங்கர் ராஜா தசரதருடன் அயோத்திக்கு வர இசைவு தெரிவிக்கிறார்.

அயோத்தியில் ரிஷி ரிஷ்யசிங்கருக்கும் மனைவி சாந்தைக்கும் மிகச் சிறப்பான வரவேற்பும் விருந்தோம்பலும் நடைபெறுகிறது. அவர்கள் இருவரும் வெகு நீண்ட சமயம் அயோத்தியில் சகல சௌக்கியங்களுடன் தங்குகின்றர். பின்னர் வசந்த ருது தொடங்கியவுடன் மிகச் சிறந்ததொரு சுபமுகூர்த்தத்தில் தசரத மன்னர் யக்ஞத்தைத் தொடங்க எண்ணம் கொள்கிறார். அப்போது அவர் ரிஷி ரிஷ்யசிங்கரை முறைப்படி தன் முக்கிய ருத்விக்காக ஏற்றுக் கொண்டு, ரிஷி ரிஷ்ய சிங்கரின் ஆக்ஞைப்படி பலம் பொருந்திய வீரர்களின் பாதுகாப்புடன் யக்ஞாசுவத்தை பூமண்டலம் அனைத்தையும் சுற்றி வர அனுப்புகிறார். மேலும், மற்றுமொரு முறை தம் ஆசாரிய பெருமக்களிடம் ஆசிகள் பெற்று மீண்டும் தம் மந்திரிகளிடம் ஸரயு நதிக்கரையில் யக்ஞ பூமியை நிறுவுமாறும் யக்ஞத்திற்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்குமாறும் உத்தரவிடுகிறார்.

யக்ஞத்திற்கான ஏற்பாடுகளில் மற்றுமொரு ஆண்டுக்காலம் கழிகிறது. மீண்டும் வஸந்த ருது தொடங்கியவுடன் ராஜா தசரதர் வசிஷ்ட முனிவரிடம் சென்று அவரை யக்ஞத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கிறார். வசிஷ்ட முனிவரும் ராஜா தசரதரின் கோரிக்கைக்கு இணங்குகிறார். அதன் பின்னரே, ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்தின் தொடக்கத்தில் காணப்படும் வேகமும் விறுவிறுப்பும் இப்போது தசரதரின் யக்ஞத்திற்கான ஏற்பாடுகளில் சிறிது தென்படுகிறது. ஸ்ரீராமர் லக்ஷ்மணனின் மூலம் கட்டளைகள் பிறப்பித்ததைப் போலவே வசிஷ்ட முனிவரும் உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார். பண்டிதர்களையும், யக்ஞக் கிரியைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களையும் அழைப்பித்து அவரவர்க்கு ஏற்ற

பணிகளை ஒப்படைக்கிறார். ஸ்தபதிகளையும், தச்சர்களையும் இன்னும் மற்ற சில்பிகளையும் யக்ஞ பூமியை நிருமிக்கும் பணியில் ஈடுபடுத்துகிறார். மேலும் பூமியின் அனைத்து மன்னர்களையும், அனைத்து மக்களையும் யக்ஞத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்குமாறு சுமந்திரருக்கு உத்தரவிடுகிறார்.

ஸ்ரீராமர் லக்ஷ்மணனிடம் கட்டளையிட்டவாறே, இங்கு வசிட்ட முனிவர் சுமந்திரரிடம், அனைத்து மன்னர்கள் மற்றும் சமுதாயத்தின் எல்லா இனத்தவரையும் யக்ஞத்திற்கு அழைக்கும்படி கட்டளை யிடுகிறார்[9]:

> निमन्त्रयस्व नृपतीन् पृथिव्यां ये च धार्मिकाः ।
> ब्राह्मणान् क्षत्रियान् वैश्याञ्शूद्रांश्चैव सहस्रशः ।
> समानयस्व सत्कृत्य सर्वदेशेषु मानवान् ।।

> பூமியில் தரும நெறியைப் பின்பற்றும் அனைத்து மன்னர்களை யும் அழைப்பாயாக. ஆயிரக்கணக்கான பிராமணர்கள், க்ஷத்திரி யர்கள், வைசியர்கள் மற்றும் சூத்திரர்களை அழைப்பாயாக. அனைத்து தேசங்களிலுமுள்ள நான்கு வருணத்தாரையும், வரு ணங்களுக்கு வெளிப்பட்டவர்களையும், அனைவரையும் ஆதரத் துடன் அழைப்பாயாக.

அச்சமயத்தில் வாழ்ந்த பல சிறந்த மன்னர்களை நேரில் சென்று அழைக்கும்படி சுமந்திரரிடம் வசிஷ்ட முனிவர் கூறுகிறார். மிதிலை யின் அதிபரும் மாவீரரும் சத்யவாதியுமான ராஜா ஜனகர், தேவர்கள் போற்றும் காசி மன்னர், ராஜா தசரதரின் மாமனாரான கேகய மன்னர், ராஜா தசரதரின் ஆப்த நண்பரும் அவருடைய யக்ஞத்தின் பிரதான ருத்விக்குமான ரிஷி ரிஷ்யசிங்கரின் மாமனார் அங்க தேசத்தரசர் உரோமபாதர், கோசலத்தின் ராஜா பானுமான் மற்றும் மகத நாட்டரசர் ப்ராப்திக்ஞர் இவர்கள் அனைவரையும் நேரில் சென்று சகல மரியா தைகளுடன் அழைத்து வருமாறு கூறுகிறார். மற்றும் கிழக்கிலுள்ள நாட்டு அரசர்களையும், மேற்கிலுள்ள சிந்து, சௌவ்வீரம், சௌராஷ் டிரம் முதலிய நாடுகளின் அரசர்களையும், தெற்கிலுள்ள அனைத்து மன்னர்களையும் அழைக்கச் சிறந்த தூதுவர்கள் தசரதரிடமிருந்து தனி ஓலைகளைப் பெற்றுச் செல்லட்டும் என்று கட்டளையிடுகிறார்.

---

[9] வா. இராமாயணம் பால 13.20-21, ப. 55

வசிஷ்ட முனிவரின் கட்டளையின்படி நடைபெற்ற யக்ஞ பூமிக்கான ஏற்பாடுகள் ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்தில் நடைபெற்றதைவிட அதிகச் சிறப்புடையதாகக் காணப்படுகிறது. ஸரயு நதியின் வடக்குக் கரையில் பிராமணர்களுக்கென நூற்றுக்கணக்கான அழகு மிகுந்த வீடுகள் கட்டப்படுகின்றன. அதே போல் அழகு வாய்ந்த விஸ்தாரமான பெரும் வீடுகள் அயோத்தி நகரவாசிகளுக்காகவும் மற்றும் வெவ்வேறு நாடுகளிலிருந்து வரும் மக்களுக்காகவும் கட்டப்படுகின்றன. வெளிநாடுகளிலிருந்து வரும் மாமன்னர்களுக்கென தனித்தனி மாளிகைகளும், அவர்தம் சேனைகள் தங்குவதற்கான பாளையங்களும், யானைக் கொட்டாரங்களும், குதிரை லாயங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வனைத்து வீடுகள், மாளிகைகள், பாளையங்கள், யானைக் கூடங்கள், குதிரை லாயங்கள் மற்றும் பொது வீடுகளிலும் உணவும் நீரும் இன்னும் மற்ற தேவையான பொருட்களும் நிறைக்கப்படுகின்றன.

வசிஷ்ட முனிவர், யக்ஞத்திற்கு வருகை தரும் அனைத்து மக்களுக்கும் ஆதரத்துடன் வரவேற்பு அளித்து முறையான உபசாரத்துடனும், மரியாதையுடனும் உணவு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்[10]:

दातव्यमन्नं विधिवत् सत्कृत्य न तु लीलया ।
सर्वे वर्णा यथा पूजां प्राप्नुवन्ति सुसत्कृताः ।
न चावज्ञा प्रयोक्तव्या कामक्रोधवशादपि ॥

*அனைவருக்கும் ஆதரத்துடன் முறைப்படி பரிவேடணம் செய்ய வேண்டும். ஒரு துளியும் அவமரியாதையோ அலட்சியமோ இன்றி அன்னமிட வேண்டும். யக்ஞ பூமிக்கு வந்து செல்வோர், யாராக இருந்தாலும், அவர் எந்த வருணத்தைச் சார்ந்தவராயினும் தகுந்த முறையில் உபசரித்து, கௌரவிக்கப்பட வேண்டும். காமக் குரோதங்களின் வசத்தால் கூட அலட்சிய பாவம் ஒரு துளியும் தலையெடுத்தல் தகாததாகும்.*

யக்ஞத்திற்கான பல்வேறு பணிகளில் ஈடுபட்டோர் தத்தம் வேலைகளை முடித்துவிட்டு வசிஷ்டரிடம் அதைத் தெரிவிக்க வந்த

[10] வா. இராமாயணம் பால 13.14-15, ப. 54

போது, வசிஷ்ட முனிவர் மீண்டும் ஒரு முறை அவர்களுக்கு அதிதிகளைக் கௌரவத்துடன் உபசரிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறுகிறார்[11]:

> अवज्ञया न दातव्यं कस्यचिल्लीलयापि वा।
>
> अवज्ञया कृतं हन्याद् दातारं नात्र संशयः ॥
>
> யாருக்கும் ஒருபொழுதும் எந்தப் பொருளையும் அலட்சியத்துடன் கொடுக்கக் கூடாது. விளையாட்டாகவோ, வேடிக்கையாகவோ கூட அசட்டை மனப்பான்மை தகாதது. ஏனெனில், அலட்சியத்துடனோ அசிரத்தையுடனோ வழங்கப்பட்ட தானம் ஈவோருக்குத் துன்பத்தையே விளைவிக்கும்; இதில் யாதொரு ஐயமும் இல்லை.

### யக்ஞமும் அன்னதானமும்

இவ்வாறு யக்ஞத்தின் ஆயத்தங்களில் பல தினங்கள் கழிகின்றன. மெல்ல மெல்ல அழைக்கப்பட்ட அரசர்கள், சிறப்பான விலை மதிப்பற்ற அன்பளிப்புகளுடன் அயோத்தியை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர். அப்போது வசிஷ்ட முனிவர் ராஜா தசரதரிடம் சென்று அனைத்து ஏற்பாடுகளும் கிட்டத்தட்ட முற்றுப் பெற்று விட்டதைத் தெரிவிக்கிறார். அதன் பின்னர் தசரதர் தன் மனைவி மார்களுடன் யக்ஞ மண்டபத்தை அடைந்து யக்ஞ தீட்சை பெற்றுக் கொள்கிறார். யக்ஞாசுவமும் ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு பூமிப் பிரதக்ஷிணம் முடித்துத் திரும்புகிறது. இவ்வாறு முன்னேற்பாடுகள் யாவும் செவ்வனே நடைபெற்ற பின்னரே தசரதரின் அசுவமேத யக்ஞம் தொடங்குகிறது.

ரிஷி ரிஷ்யசிங்கரின் தலைமையில் அனைத்து வித்வான்களும் புரோகித வல்லுநர்களும் அசுவமேத யக்ஞத்திற்கு வேண்டிய எல்லாக் கருமங்களையும் துளியும் பிசகின்றி செவ்வனே நிறைவேற்றுகின்றனர். அங்குக் கூடிய வித்வான்களும், வேத வித்தகர்களும் மற்றும் மஹரிஷிகளும் சுத்தமான ஸ்வரத்துடனும், லயத்துடனும் வேத மந்திரங்களை உச்சரிக்கின்றனர். ராஜா தசரதரின் இச்சிறந்த அசுவமேத யக்ஞம், யாதொரு விபரீதமும் விளையாமல், எந்த மந்திரத்தின்

[11] வா. இராமாயணம் பால 13.33-34, ப. 55

உச்சரிப்பிலும் சிறு பிழையும் நேராமல், எந்தக் கருமத்தின் முறையும் தவறாமல் குறைபாடின்றி நன்கு நிறைவேற்றப்படுகின்றது.

ஆயினும், இவையனைத்தும் மிகச் சிறப்பான இடையறாத அன்னதானத்தின் பின்னணியிலேயே நடைபெறுகின்றன. ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்தைப் போன்றே ராஜா தசரதரின் இந்த யக்ஞத்திலும் மாபெரும் அன்னதானமே அனைத்துக் கருமங்களுக்கும் மையமாக விளங்குகிறது. இவ்விரண்டு மகாயக்ஞங்களுக்கும் சூழ்நிலைகள் மற்றும் குறிக்கோள்களில் வேறுபாடுகள் பல இருந்தாலும் இவ்விரண்டு யக்ஞங்களிலும் நடைபெறும் அன்னதானத்தின் வருணனைகள் ஏறத்தாழ ஒன்றாகவே உள்ளன. ராஜா தசரதரின் அசுவமேத யக்ஞத்தில் நடைபெறும் மாபெரும் அன்னதானத்தை மகாகவி வால்மீகி இவ்வாறு வருணிக்கிறார்[12]:

न तेष्वहःसु श्रान्तो वा क्षुधितो वा न दृश्यते ।
नाविद्वान् ब्राह्मणः कश्चिन्नाशतानुचरस्तथा ।
ब्राह्मणा भुञ्जते नित्यं नाथवन्तश्च भुञ्जते ।
तापसा भुञ्जते चापि श्रमणाश्चैव भुञ्जते ।
वृद्धाश्च व्याधिताश्चैव स्त्रीबालाश्च तथैव च ।
अनिशं भुञ्जमानानां न तृप्तिरुपलभ्यते ।
दीयतां दीयतामन्नं वासांसि विविधानि च ।
इति संचोदितास्तत्र तथा चक्रुरनेकशः ।
अन्नकूटाश्च दृश्यन्ते बहवः पर्वतोपमाः ।
दिवसे दिवसे तत्र सिद्धस्य विधिवत् तदा ।
नानादेशादनुप्राप्ताः पुरुषाः स्त्रीगणास्तथा ।
अन्नपानैः सुविहितास्तस्मिन् यज्ञे महात्मनः ।
अन्नं हि विधिवत्स्वादु प्रशंसन्ति द्विजर्षभाः ।
अहो तृप्ताः स्म भद्रं ते इति शुश्राव राघवः ॥

யக்ஞம் நடைபெறும் அத்தினங்களில் ஒருவரும் பசி தாகத்துடனோ, களைப்புடனோ, இளைப்புடனோ காணப்படவில்லை.

[12] வா. இராமாயணம் பால 14.11-17, ப. 57

அந்த யக்ஞத்தில் வித்வான் அல்லாத, அல்லது, நூற்றுக்கணக்கான சீடர்களுடன் இல்லாத பிராமணர் யாரும் தென்படவில்லை.

அங்கு இடைவிடாத அன்னதானம் நடைபெற்ற வண்ணம் இருக்கிறது; பிராமணர்கள் உண்கின்றனர், சாமானிய மக்கள் உண்கின்றனர், தபஸ்விகளும் சன்னியாசிகளும் உண்கின்றனர், வயோதிகர்களும், ஸ்திரீகளும், பாலகர்களும், அனைவரும் உண்கின்றனர், தொடர்ந்து உண்ணும் அவர்கள் நிறுத்த மனமின்றி உண்கின்றனர்.

'அன்னமளி, விதம் விதமான வஸ்திரமளி' என்று கொடுத்துக் கொண்டிருப்போரை மேலும் தூண்ட, அவர்கள் இங்குமங்கும் ஓடிப் பலவிதமான உணவுகளையும், ஆடைகளையும் வாரி வழங்கிய வண்ணம் உள்ளனர்.

யக்ஞத்தில் ஒவ்வொரு தினமும் மிகவும் சிரத்தையுடன் தயாரிக்கப்பட்ட உணவு மலைகள் குவிந்திருந்தன. பல தூர தேசங்களிலிருந்து வந்திருந்த ஆடவரும் பெண்டிரும் இவ்வாறு ஏராளமாய் நிறைந்த அன்னபானங்களினால் மிகுந்த திருப்தி அடைகின்றனர். துவிஜ சிரேஷ்டர்கள் அன்னதானத்தைப் புகழ்ந்து ரகு குலத்தின் ராஜா தசரதரை ஆசீர்வதித்து இவ்வாறு வாழ்த்துகின்றனர்:

'இந்த அன்னம் முறையாகச் செய்யப்பட்டு மிகவும் சிரத்தையுடன் அளிக்கப்பட்டு அதி ருசிகரமாய், அருமையாய் இருந்தது. எங்களுக்குப் பரிபூரண திருப்தி உண்டாயிற்று. ராகவா! உமக்கு மங்களம் உண்டாகட்டும்!'

ராஜா தசரதரின் அசுவமேத யக்ஞத்தில் நடைபெற்ற அன்ன தானத்தின் இந்த வருணனை ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்தில் நடைபெற்ற அன்னதானத்தின் வருணனையை விட மிகவும் விரிவாக உள்ளது. ராஜா தசரதரின் யக்ஞத்திற்கான ஆயத்தங்கள் எவ்வளவு நிதானமாக எந்த அவசரமும் இன்றி நடைபெறுகிறதோ, அத்துணை மெதுவாகவே யக்ஞத்தின் அனைத்துக் கருமங்களும் வெகு விஸ்தாரமாய் நடைபெறுகின்றன. அசுவமேத யக்ஞம் முடிவடைந்தவுடன் புத்ரேஷ்டி யக்ஞம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த யக்ஞத்தின் சடங்குகளும் மிக விஸ்தாரமாக நிறைவேற்றப்படுகின்றன. மகாகவி வால்மீகியின் ஆதிகாவியத்தில் இவற்றின் அனைத்துச் செய்முறைகளும் மிகத்

தெளிவாகவும் நுணுக்கத்துடனும் வருணிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை அனைத்திற்கும் இடையே அன்னதானத்தின் முக்கியத்துவமே சிறப்பாகத் தென்படுகிறது. இராமாயணத்தின் இறுதிப் பகுதியில் நடைபெறும் ஸ்ரீராமரின் அசுவமேத யக்ஞத்திலும், தொடக்கத்தில் நடைபெறும் ராஜா தசரதரின் இந்த அசுவமேத யக்ஞத்திலும் அன்னம் மற்றும் அன்னதானத்தின் மாகாத்மியமுமே தலைசிறந்து விளங்கு கிறது.

## இராமராஜ்யம்

மகாகவி வால்மீகியின் ஆதிகாவியமான இராமாயணம் இவ்வாறாக மகத்தானதொரு அன்னதானத்துடன் தொடங்கி, அவ்வாறே மகத்தான தொரு அன்னதானத்துடன் முற்றுப் பெறுகின்றது. ஸ்ரீராமரின் பூலோக சஞ்சாரத்தின் சம்பவங்கள் யாவும் இவ்விரண்டு யக்ஞங்களுக்கி டையிலேயே கூறப்படுகிறது. எனவே மகாகவி வால்மீகி இராம ராஜ்யத்தை வருணிக்கும் போதெல்லாம் எங்கும் அன்னத்தின் மிகுதி யும், அனைத்து உயிர்களின் இடையூறற்ற அமைதியான ஹ்ருஷ்ட, புஷ்ட வாழ்க்கையின் பிரதிபலிப்பும் மீண்டும் மீண்டும் எழுவது இயற்கையே. ஸ்ரீமத் வால்மீகி இராமாயணத்தின் தொடக்கத்திலேயே, மகாகவி வால்மீகி, நிகழப்போகும் இராமராஜ்யத்தை இவ்வாறு சித்திரிக்கிறார்[13]:

> प्रहृष्टमुदितो लोकस्तुष्टः पुष्टः सुधार्मिकः ।
> निरामयो ह्यरोगश्च दुर्भिक्षभयवर्जितः ।
> न पुत्रमरणं केचिद् द्रक्ष्यन्ति पुरुषाः क्वचित् ।
> नार्यश्चाविधवा नित्यं भविष्यन्ति पतिव्रताः ।
> न चाग्निजं भयं किंचिन्नाप्सु मज्जन्ति जन्तवः ।
> न वातजं भयं किंचिन्नापि ज्वरकृतं तथा ।
> न चापि क्षुद्भयं तत्र न तस्करभयं तथा ।
> नगराणि च राष्ट्राणि धनधान्ययुतानि च ।
> नित्यं प्रमुदिताः सर्वे यथा कृतयुगे तथा ॥

[13] வா. இராமாயணம் பால 1.90-94, ப. 30

ஸ்ரீராமரின் ராஜ்யத்தில் அனைத்து மக்களும் சந்தோஷத்துடனும், சுகத்துடனும் வாழ்கின்றனர்; நல்லூட்டம் பெற்றவராய் விளங்குகின்றனர்; அனைவரும் தார்மீக வாழ்க்கையிலேயே நிலை பெற்று இருக்கின்றனர்; எப்பொழுதும் எல்லோரும் நலமுடனும், எவ்விதத்திலும் எந்த வியாதியும் அணுகாது வாழ்கின்றனர்; பஞ்சம், பற்றாக்குறை இவற்றின் பயம் ஒருபொழுதும் அவர்களிடம் தென்படவில்லை.

எந்த பெற்றோரும் குழந்தை இறப்பதைப் பார்க்கவில்லை. எந்த ஸ்திரீயும் புருஷனின் மரணத்தைக் காணவில்லை. எல்லா ஸ்திரீகளும் எப்பொழுதும் பதிவிரதா தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகினர்.

அங்குத் தீயினால் ஒருவருக்கும் கேடு விளையவில்லை. யாருக்கும் நீரால் விபத்தொன்றும் நேரவில்லை; காற்று தூய்மை உடையதாய் இருந்தது. எந்த ஜுரத்தின் பயமும் அவர்களை அணுகவில்லை. பசியைப் பற்றிய கவலை ஒருவருக்கும் இருக்கவில்லை. ஒருபொழுதும் எங்கும் எதுவும் களவாடப்படவில்லை.

நாடு நகரங்கள் தனதானியங்களால் நிரம்பி வழிந்தன. எல்லோரும் எப்பொழுதும் நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் இருந்தனர். இராமராஜ்யத்தில் சத்ய யுகமே மீண்டும் திரும்பியது போல் தோன்றியது.